**சிவில் சமூக அமைப்புக்கள் இழப்பீட்டுக்கான அலுவலகம் தொடர்பிலான சட்டமூலத்தில் அக்கறை கொண்டுள்ளன.**

2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட இழப்பீட்டுக்கான அலுவலகம் தொடர்பிலான சட்டமூலம் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் சமூக செயற்பாட்டாளர்களும் குழுக்களும் தமது கூர்மையான அவதானத்தைச் செலுத்திவருகிறார்கள். அவர்கள் இச்சட்டமூலத்தின் உள்ளடக்கத்திலும் சட்ட முன்மொழிவிலும் இவ் அலுவலகத்தின் அதிகாரம் மற்றும் தொழிற்பாடு தொடர்பில் இரண்டு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ளத்தவறும் பட்சத்தில், இவ் விடயம் விவாதத்திற்குரியதாகமாறும். எனவே இப் பிரச்சினைக்கான தீர்வுகளுக்காக இத் திருத்தச்சட்டமூலத்தில் திருத்தங்களை கோருகின்றோம். சிவில் சமூகங்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் ஆகிய நாங்கள் இப்பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் இத் திருத்தச்சட்டமூலத்தில் மேலும் ஆலோசனைகளை வழங்குவதுடன் எதிர்காலத்தில் அர்த்தமுள்ள அலோசனைகளை மேலும் வழங்க ஊக்குவிக்கின்றோம்.

திருத்தச்சட்ட மூலத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் உச்ச அளவில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

1. முன்மொழியப்பட்ட இவ் அலுவலகத்திற்கு கொள்கைகள் மற்றும் இழ்ப்பீடு தொடர்பான வழிகாட்டுதல்கள் மூலம் எந்தவொரு தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் இல்லை. உண்மையில் இவ் அலுவலகத்தால் முன்மொழியப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அமைச்சரவையின் (பிரிவு 11(1)(ப)) ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இத் அவசியமற்ற விபரங்கள் அமைச்சரவையின் தீர்மானமெடுக்கும் அலகினால் கொள்கைகள் மற்றும் இழ்ப்பீடு தொடர்பான வழிகாட்டுதல்களாக உள்ளடக்கப்பட்டவை பிரச்சினைக்குரிய விடயங்களாக இருக்கின்றன. மேலும் தற்காலிகமாக அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள். கடந்த காலத்தில் அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையைக் குறைத்து மதிப்பிடுவது போலாகும்.

2. மேலும், அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பாராளுமன்றத்தின் முன் நிதி வழங்குவதற்கான ஒப்புதலுக்காக வைக்கப்படவேண்டும்.(பிரிவு(22)(4). இச் செயற்பாடு தேவையற்றவற்றை நீக்கி, தேவையானவற்றை அலுவலகத்திற்கு முன்மொழியும். இது இவ் அலுவலகத்திற்கான சொந்தப்பணத்தைப் பயன்படுத்துவதனைக் கட்டாயமாக்கும். எனவே இது பாராளுமன்ற மேற்பார்வைக்கு தேவையற்ற ஒரு விடயத்தை உள்ளடக்குகின்றது. ஆதன்படி கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் உள்ளீடு மேலும் வலுவிழக்கலாம்.

இந்த இரண்டு பிரிவுகளும் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உள்ளடக்கி தீர்மானமெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதில் பாரியளவில் பிரச்சினைக்குரியனவாக இருக்கின்றன. சுாராம்சத்தில் இத்தகைய சிக்காலான உட்பிரிவுகளைச் சேர்த்துக்கொள்வதானது, அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களைச் செயற்படுத்துவதில் சிக்கல்களை உருவாக்கும். இழப்பீடு ஆனது வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுடைய வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமான பிரிவாகக் காணப்படுகிறது. எனவே இச் செயற்பாடு சரியான முறையில் செயற்படுத்தப்படுமாயின், இலங்கையில் பாரியளவிலான மாற்றத்தை உருவாக்க முடியும். எப்படியென்றாலும், இழப்பீடுகளைப் பயனுடையதாக்குவதற்கு பிரயோசனமான வெளிப்படையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். எனவே சுயாதீனமான அலுவலமாக, அரசியல் தலையீடுகளற்றதாக, அதிகாரங்களைக் கொண்டதாக, மறுசீரமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம். இந்த சூழ்நிலையில், 2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்க பொறிமுறையின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை முழுவதிலும் உள்ள வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய பொறிமுறையொன்றைச் செயற்படுத்த அரசாங்கம் இந்தச் சந்தற்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.